36. காரங்கள் அலோக ஆக்சைடுகளுடன் வினைபுரிந்து கொடுப்பது. _______.

(1) உப்பு மற்றும் ஹைட்ராக்சைடு (2) உப்பு மற்றும் கார்பனேட்டு

(3) உப்பு மற்றும் நீர் (4) உப்பு மற்றும் ஹைட்ரஜன்.

37. பின்வருவனவற்றுள் அமிலங்கள் மற்றும் காரங்களின் பண்புகளுள் தவறானது எது?

(1) இரண்டும் அரிக்கும் தன்மையுடையது

(2) நீர்க்கரைசலில் அயனியாக்கத்திற்கு உட்படுதல்

(3) நீர்க்கரைசலில் மின்சாரத்தைக் கடத்துதல்

(4) நடுநிலையாக்கல் வினைக்கு உட்படாமை

38. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது?

(1) அமிலங்கள் நீரில் $H^+$ அயனியையும், காரங்கள் $OH^-$ அயனிகளையும் தருகின்றன.

(2) அமிலங்கள் புளிப்புச் சுவையுடையது, காரங்கள் கசப்புச் சுவையுடையவை.

(3) சில அமிலங்கள் திட நிலையில் காணப்படுகிறது, பெரும்பாலான காரங்கள் திட நிலையில் காணப்படுகிறது.

(4) அமிலங்கள் சிவப்பு லிட்மஸ் தாளை நீலமாகவும், காரங்கள் நீல லிட்மஸ் தாளை சிவப்பாகவும் மாற்றுகின்றன.

39. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. குளியல் சோப்பு | - | a. சோடியம் ஹைட்ராக்சைடு |
| ii. சலவை சோப்பு | - | b. பொட்டாசியம் ஹைட்ராக்சைடு |
| iii. வயிற்றில் உருவாகும் அமிலத்தை நடுநிலையாக்கல் | - | c. கால்சியம் ஹைட்ராக்சைடு. |
| iv. வெள்ளை அடிக்க | - | d. அலுமினியம் ஹைட்ராக்சைடு |

(1) i - d ii - c iii - b iv - a (2) i - b ii - a iii - d iv - c

(3) i - c ii - a iii - d iv - b (4) i - b ii - c iii - d iv - a

40. உரங்கள், நைலான்கள், நெகிழிகள் மற்றும் இரப்பர்கள் தயாரிக்க _______ பயன்படுகின்றன.

(1) கால்சியம் ஹைட்ராக்சைடு (2) சோடியம் ஹைட்ராக்சைடு

(3) அம்மோனியம் ஹைட்ராக்சைடு (4) பொட்டாசியம் ஹைட்ராக்சைடு

41. கீழ்க்காணும் நடுநிலையாக்கல் வினையில் தவறான இணையைக் கண்டுபிடிக்கவும்.

(1) ஃபார்மிக் அமிலம் - கால்சியம் ஹைட்ராக்சைடு

(2) அல்கலி காரம் - வினிகர்

LIVEWORKSHEETS

(3) சல்பியூரிக் அமிலம் - சுண்ணாம்பு

(4) ஹைட்ரோகுளோரிக் அமிலம் - வினிகர்

42. அமிலம் + காரம் → _______

(1) உப்பு + ஹைட்ரஜன்
(2) உப்பு + ஆக்ஸிஜன்
(3) உப்பு + நீர்
(4) உப்பு + நைட்ரஜன்

43. சல்பர் டை ஆக்ஸைடு வாயுவை நடுநிலையாக்கச் சேர்க்கப்படும் பொருள் _______.

(1) மெக்னீசியம் ஹைட்ராக்சைடு
(2) பொட்டாசியம் ஹைட்ராக்சைடு
(3) சோடியம் ஹைட்ராக்சைடு
(4) சுண்ணாம்புத்தூள்

44. கீழ்க்காணும் நிறங்காட்டி குறித்த கூற்றுகளில் தவறானது எது?

(1) நிறங்காட்டி என்பது ஒரு வேதிப்பொருள்

(2) நிறங்காட்டி இயற்கையானதாகவோ (or) செயற்கையானதாகவோ இருக்கலாம்.

(3) ஒரு வேதிப்பொருள் அமிலத்தன்மையுடையதா அல்லது காரத்தன்மையுடையதா என்பதை பொருத்தமான நிறமாற்றத்தின் அடிப்படையில் குறிப்பதே நிறங்காட்டி.

(4) பினாப்தலீன் ஒரு இயற்கை நிறங்காட்டியாகும்.

45. இயற்கை நிறங்காட்டி குறித்த தவறான ஒன்றைக் குறிப்பிடுக.

(1) லிட்மஸ்
(2) மஞ்சள் சாறு
(3) பீட்ரூட் சாறு
(4) மெத்தில் ஆரஞ்சு

46. மஞ்சள் நிறங்காட்டி குறித்த கீழ்க்கண்ட எந்த கூற்று மாறுபட்டுள்ளது?

(1) மஞ்சள் தூளில் சிறிதளவு நீரைச் சேர்த்து தயாரிக்கப்படும் மஞ்சள் தூள் பசை மை உறிஞ்சும் தாள் (or) வடிதாளின் மீது பூசப்பட்டு உலர்த்தப்படுகிறது.

(2) அமிலக்கரைசலில் மஞ்சள் நிறங்காட்டி எந்த நிற மாற்றத்தையும் தருவதில்லை.

(3) காரக்கரைசலில் மஞ்சள் நிறங்காட்டி மஞ்சள் நிறத்திலிருந்து இளஞ்சிவப்பு நிறமாக மாறுகிறது.

(4) மஞ்சள் கறை படிந்த ஒரு வெள்ளைத் துணியை சலவை சோப்பு(காரம்) கொண்டு துவைக்கும் போது மஞ்சள் கறை சிவப்பு நிறத்திற்கு மாற்றமடைகிறது.

47. செம்பருத்தி நிறங்காட்டி முறையே அமில மற்றும் காரக் கரைசலில் சேர்க்கும்போது நடைபெறும் நிறமாற்றம் _______, _______.

(1) இளஞ்சிவப்பு, பச்சை
(2) சிவப்பு, நீலம்
(3) நீலம், இளஞ்சிவப்பு
(4) இளஞ்சிவப்பு, மஞ்சள்

48. லிட்மஸ் நிறங்காட்டி _______ லிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது.

(1) ரிக்ஸியா
(2) வேலிஸ்னேரியா
(3) லைக்கன்
(4) பியூனேரியா

LIVEWORKSHEETS

49. கீழ்கண்டவற்றுள், லிட்மஸ் நிறங்காட்டி குறித்த தவறான கூற்று எது?

(1) லிட்மஸ் நிறங்காட்டி கரைசல் வடிவிலோ அல்லது லிட்மஸ் கரைசலை உறிஞ்சிய வடிதாள் வடிவிலோ பயன்படுத்தப்படுகிறது.

(2) இந்தத்தாள் சிவப்பு அல்லது நீல நிறத்தில் இருக்கும்.

(3) வினிகரில் நீல லிட்மஸ் தாள் நிறமாற்றமடைவதில்லை.

(4) குளியல் சோப்புக் கரைசலில் சிவப்பு லிட்மஸ் தாள் நிறமாற்றத்தை உருவாக்குகிறது.

50. பொருத்துக:

| | | |
|---|---|---|
| i. நீல லிட்மஸ் தாள் | - | a. அமிலக் கரைசலில் நிறமற்றது காரக் கரைசலில் இளஞ்சிவப்பு நிறம். |
| ii. சிவப்பு லிட்மஸ் தாள் | - | b. அமிலக் கரைசலில் சிவப்பு நிறம் காரக் கரைசலில் நிறமாற்றமில்லை. |
| iii. பினாப்தலீன் | - | c. அமிலக் கரைசலில் சிவப்பு நிறம் காரக் கரைசலில் மஞ்சள் நிறம். |
| iv. மெத்தில் ஆரஞ்சு | - | d. அமிலக் கரைசலில் நிறமாற்றமில்லை காரக்கரைசலில் நீல நிறம். |

(1) i - c ii - b iii - a iv - d (2) i - b ii - d iii - a iv - c

(3) i - b ii - a iii - c iv - d (4) i - d ii - b iii - a iv - c

51. பற்களுக்கிடையே சிக்கியுள்ள உணவுத்துகள்கள் மேல் பாக்டீரியா செயல்பட்டு _______ உருவாவதால் பற்சிதைவு உண்டாகிறது.

(1) அமிலம் (2) காரம் (3) ஆல்கஹால் (4) உப்புகள்

52. _______ கரைசலில் மஞ்சள் நிறங்காட்டி எந்த மாற்றத்தையும் தருவதில்லை.

(1) காரக் (2) அமிலக் (3) உப்புக் (4) ஆல்கஹால்

53. காரக் கரைசலில் மஞ்சள் நிறங்காட்டி மஞ்சள் நிறத்திலிருந்து _______ நிறமாக மாறுகிறது.

(1) சிவப்பு (2) பச்சை (3) இளஞ்சிவப்பு (4) நீல

54. மஞ்சள் கறைபடிந்த ஒரு வெள்ளைத் துணியை சலவை சோப்பு(காரம்) கொண்டு துவைக்கும் போது மஞ்சள் கறை _______ நிறத்திற்கு மாற்றமடைகிறது.

(1) இளஞ்சிவப்பு (2) ஆரஞ்சு (3) சிவப்பு (4) பச்சை

55. லிட்மஸ் தாள் _______ அல்லது _______ நிறத்தில் இருக்கும்.

(1) மஞ்சள், நீலம் (2) நீலம், பச்சை (3) சிவப்பு, நீலம் (4) சிவப்பு, மஞ்சள்

56. சிவப்பு லிட்மஸ் தாள் காரக் கரைசலில் _______ நிறமாக மாறும்.

(1) நீல (2) பச்சை (3) இளஞ்சிவப்பு (4) மஞ்சள்

LIVEWORKSHEETS

57. நீல லிட்மஸ் தாள் அமிலக் கரைசலில் _______ நிறமாக மாறும்.

(1) சிவப்பு (2) இளஞ்சிவப்பு (3) மஞ்சள் (4) பச்சை

58. வினிகரில் _______ லிட்மஸ் தாள் _______ நிறமாக மாறுகிறது.

(1) நீல, சிவப்பு (2) சிவப்பு, நீல (3) நீல, இளஞ்சிவப்பு (4) சிவப்பு, பச்சை

59. குளியல் சோப்புக் கரைசல் _______ லிட்மஸ் தாளை _______ நிறமாக மாற்றுகிறது.

(1) சிவப்பு, நீல (2) நீல, சிவப்பு

(3) சிவப்பு, இளஞ்சிவப்பு (4) நீல, பச்சை

60. பினாப்தலீனுடன் _______ கலந்த கரைசல் நிறங்காட்டியாகப் பயன்படுகிறது.

(1) உப்பு (2) அமிலம் (3) காரம் (4) ஆல்கஹால்

**NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:**

61. ஜீரண நிகழ்வுடன் தொடர்புடைய காரம் (NMMS - 2015)

(1) சோடியம் ஹைட்ராக்சைடு (2) மெக்னீசியம் ஹைட்ராக்சைடு

(3) கால்சியம் ஹைட்ராக்சைடு (4) அம்மோனியம் ஹைட்ராக்சைடு

62. புரதத்தில் இருக்கும் அமிலம் (2015)

(1) அமினோ அமிலம் (2) கொழுப்பு அமிலம்

(3) டி- ஆக்சி ரிபோ நியுக்ளிக் அமிலம் (4) ரிபோ நியுக்ளிக் அமிலம்

63. ஆடைகளில் படிந்துள்ள கறைகளை போக்க உதவுவது (NMMS - 2016)

(1) சோடியம் ஹைட்ராக்சைடு (2) மெக்னீசியம் ஹைட்ராக்சைடு

(3) கால்சியம் ஹைட்ராக்சைடு (4) அலுமினியம் ஹைட்ராக்சைடு

64. பொருந்தாதைக் கண்டுபிடிக்கவும் (NMMS - 2016)

(1) லிட்மஸ் (2) மஞ்சள் தூள்

(3) மெத்தில் ஆரஞ்சு (4) சிவப்பு முட்டைக்கோஸ் சாறு

65. சிட்ரிக் அமிலம் + சோடியம் - பை - கார்பனேட் → உப்பு + _______ + நீர் (NMMS - 2016)

(1) கார்பன் மோனாக்ஸைடு (2) கார்பன் - டை - ஆக்ஸைடு

(3) சல்பர் - டை - ஆக்ஸைடு (4) நைட்ரிக் ஆக்ஸைடு

66. மெக்னீசியம் பால்மம் கீழ்க்கண்ட எத்துறையில் பயன்படுகிறது (NMMS - 2017)

(1) உரத் தொழிற்சாலை (2) நூற்பாலை

(3) நீர் சுத்தகரிப்பு ஆலை (4) மருந்து தயாரிக்கும் தொழிற்ச்சாலை

67. எறும்பிலுள்ள அமிலத்தின் பெயர் (NMMS - 2017)

LIVEWORKSHEETS

(1) ஃபார்மிக் அமிலம் (2) அசிட்டிக் அமிலம்

(3) கார்பானிக் அமிலம் (4) ஆக்ஸாலிக் அமிலம்

68. காலமைன் என்பது (NMMS - 2017)

(1) கால்சியம் கார்பனேட் (2) மெக்னீசியம் கார்பனேட்

(3) சோடியம் கார்பனேட் (4) துத்தநாக கார்பனேட்

69. NaOH + HCl → _______ + _______ + வெப்பம் (NMMS - 2018)

(1) சோடியம் நைட்ரேட் மற்றும் சோடியம்

(2) சோடியம் நைட்ரேட் மற்றும் ஆக்ஸிஜன்

(3) சோடியம் குளோரைடு மற்றும் நீர்

(4) சோடியம் குளோரைடு மற்றும் சோடியம்

70. ஹைட்ராஞ்ஜியா மேக்ரோபைலா காரத்தன்மையுள்ள மண்ணில் _______ வண்ணத்தில் பூக்கும். (NMMS - 2019)

(1) ஊதா (2) நீலம் (3) சிவப்பு (4) வெள்ளை

71. பொருத்துக. (NMMS - 2019)

i. எறும்பு - a. கரிம அமிலம்

ii. தாவரங்கள் மற்றும் விலங்குகள் - b. டார்டாரிக் அமிலம்

iii. திராட்சை - c. லாக்டிக் அமிலம்

iv. பால் - d. ஃபார்மிக் அமிலம்

(1) i - a ii - b iii - d iv - c (2) i - d ii - b iii - a iv - c

(3) i - a ii - c iii - d iv - b (4) I - d ii - a iii - b iv - c

72. சரியான இணைகளைத் தேர்ந்தெடு (NMMS - 2020)

(A) அல்கலிகள் - நீரில் கரையும் காரங்கள்

(B) காரங்கள் - நீல லிட்மஸ் தாளை சிவப்பாக மாற்றும்

(C) அமிலங்கள் - மின்சாரத்தைக் கடத்தும்

(1) A மட்டும் (2) B மற்றும் C மட்டும்

(3) A மற்றும் C மட்டும் (4) C மட்டும்

LIVEWORKSHEETS